15.12.2023

# தமிழ் மக்களின் நிலைப்பாடுகளை கருத்தில் கொள்ளாத "இமயமலை பிரகடனத்தை" தமிழ் சமூக அமைப்புகள், மாணவர்கள், பாதிக்கப்பட்ட தரப்பினர் மற்றும் மதத்தலைவர்கள் கூட்டாக நிராகரிக்கின்றனர்

சிறந்த இலங்கைக்கான சங்கா (SBSL) மற்றும் Global Tamil Forum (GTF) ஆகியவற்றின் சமீபத்திய "இமயமலை பிரகடனம்" பற்றி வடக்கு கிழக்கை தளமாகக் கொண்ட, கீழ் கையொப்பமிட்ட அமைப்புகளாகிய நாங்கள் கூட்டாக இந்த அறிக்கையை வெளியிடுகின்றோம்.

இமயமலைப் பிரகடனத்தை ("பிரகடனம்") நாம் கவனமாக வாசித்தோம். ஆனால் இந்த பிரகடனம் தமிழ் மக்களின் கருத்துக்களையோ, இலங்கைத்தீவு சுதந்திரம் அடைந்த நாளிலிருந்து தமிழ் மக்கள் சிங்கள பேரினவாதத்தினால் அனுபவித்த துன்பங்கள், கொடுமைகளையோ கருத்தில் கொள்ளாமை தொடர்பில் நாம் எமது கடும் அதிருப்தியை வெளியிடுகின்றோம்.

வெளிப்படையாகவே பௌத்த மதகுருமார் தமிழ் மக்களின் துன்பங்கள் தொடர்பான தெளிவு அற்றவர்களாகவே உள்ளார்கள். ஏனெனில் அவர்கள் தமிழ் பகுதிகளுக்கு வெளியே சிங்களவர்களிடையே வாழ்கிறார்கள். மேலும் நாம் அனுபவித்த, அனுபவித்துக் கொண்டிருக்கும் அடக்குமுறைகள் தொடர்பாக அவர்கள் எவ்வித கரிசனைகளையும் கொண்டிருக்கவில்லை.

பதினான்கு வருடங்களுக்கு முன்னர் யுத்தம் முடிவடைந்த பின்னர், 2021ம் ஆண்டு, பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சியின் ஊடாக தமிழ் மக்களின் அபிலாஷைகளை வெளிப்படுத்தியுள்ளோம். சிறிலங்கா இராணுவத்தின் மிரட்டல்கள், அச்சுறுத்தல்கள் மற்றும் கைதுகளுக்கு மத்தியிலும் ஏறக்குறைய சுமார் ஐந்து இலட்சம் தமிழர்கள் இணைந்து பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை ஐந்து நாள் மக்கள் பேரெழுச்சி மூலம் தமிழ் இனத்தின் நிலைப்பாட்டினை வெளிப்படுத்தி இருந்தனர். தமிழ்ப் பல்கலைக்கழக மாணவர்களும், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் போன்ற பாதிக்கப்பட்ட அமைப்பினரும் பல போராட்டங்களையும் பேரணிகளையும் நடத்தி தமிழர்களின் நிலைப்பாட்டினை தொடர்ந்தும் வெளிப்படுத்தி வருகின்றனர். இவை எதுவும் இந்த "பிரகடனத்தில்" கவனத்தில் கொள்ளப்படவில்லை. கடந்த பதினான்கு ஆண்டுகளாக தமிழர்களால் வெளிப்படுத்தப்பட்ட தமிழ் மக்களின் நிலைப்பாட்டினை அனைவரின் கவனத்திற்கும் மீண்டும் கொண்டுவர விரும்புகிறோம்.

1. போருக்கு முந்தைய 1983ம் ஆண்டு காலப்பகுதியில் இருந்த அளவிற்கு தமிழர் பகுதிகளில் சிறிலங்கா இராணுவத்தை குறைத்தல். போர் முடிவடைந்து பதினான்கு ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. ஆனால் மே 2009 இல் போரின் உச்சக்கட்டத்தில் இருந்ததைப் போலவே மோசமான அளவில் இராணுவ கட்டமைப்பு தமிழர் தாயகத்தில் பராமரிக்கப்பட்டு வருகிறது. தமிழ் இனப்படுகொலை மற்றும் தமிழ்ப் பெண்களைக் கற்பழித்தல் போன்ற பல கொடூரமான குற்றங்களை மேற்கொண்ட சிறிலங்கா ஆயுதப்படை தமிழர் நிலங்களில் தொடர்ந்து நிலைகொண்டிருப்பது, தமிழ் மக்களை தொடர்ந்தும் அச்ச சூழ்நிலையில் வைத்திருப்பதுடன் பல்வேறு சமூக பிரச்சனைகளையும் ஏற்படுத்துகின்றது.

2. ஐ.நா அதிகாரிகளின் முன்மொழிவுகளுக்கு அமைவாக சிறிலங்காவை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் (ICC) பாரப்படுத்தவும். 2009 இல் நடந்த போரின் இறுதி ஆறு மாதங்களில் ஏறக்குறைய எழுபதாயிரம் தமிழர்கள் கொல்லப்பட்டமை ஐ.நா. உள்ளக ஆய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் கைக்குழந்தைகள், சிறுவர்கள் உட்பட ஆயிரக்கணக்கான தமிழர்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். போர் முடிவடைந்து பதினான்கு ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும்

இவ்வினவழிப்பினையும் போர்குற்றங்களையும் நடாத்திய ஒரு பாதுகாப்புப் படை அதிகாரிகளோ அல்லது அரசியல் தலைவர்களோ நீதியை எதிர்கொள்ளவில்லை. மனித உரிமைகளுக்கான ஐ.நா உயர்ஸ்தானிகர் உட்பட பல ஐ.நா அதிகாரிகள் பரிந்துரைத்தது போல சிறிலங்காவை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு (ICC) பரிந்துரைக்குமாறு நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

3. சிறிலங்கா இராணுவம் உட்பட்ட அரசு நிறுவனங்களின் உதவியுடன் பல வரலாற்று சிறப்பு மிக்க சைவ ஆலயங்கள் அழிக்கப்பட்டு, சிங்களவர்கள் பூர்வீகமாக வசிக்காத தமிழர் தாயகமான வடக்கு கிழக்கு எங்கும் பௌத்த கோயில்கள் கட்டப்படுவது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

4. தமிழர் தாயகத்தின் இனப்பரம்பலை மாற்றி அமைக்கும் முனைப்புடன் சிங்கள பௌத்த அரச துணையுடன் தமிழர் தாயகம் எங்கும் இடம்பெறும் அத்துமீறிய சிங்கள குடியேற்றங்களும் காணி அபகரிப்புகளும் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.


5. மீண்டும் ஒரு இனவழிப்பும் இரத்தக்களரியும் இந்த தீவில் ஏற்படுவதைத் தடுக்க, இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வினை ஏற்படுத்தும் விதமாக தமிழ் மக்களிடையே சர்வதேசத்தினால் பொது வாக்கெடுப்பு நடாத்தப்பட வேண்டும்: இலங்கை சுதந்திரம் பெற்றதில் இருந்து நீடித்து வரும் இனப்பிரச்சினைக்கு காரணம் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு வழங்கப்படாமையே ஆகும். இதன் விளைவாக 1958, 1977, 1983 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் தமிழர்கள் பாரியளவில் படுகொலை செய்யப்பட்டனர். தமிழ் தலைவர்களுக்கும் சிங்கள பெரும்பான்மை அரசுகளுக்கும் இடையிலான பல உடன்படிக்கைகள் தொடர்ந்து வந்த அரசுகளால் கிழித்தெறியப்பட்டன. இந்தியா மற்றும் நோர்வே மேற்கொண்ட சர்வதேச மத்தியஸ்தங்களும் கூட தோல்வியடைந்தன. உலகெங்கிலும் உள்ள பல நாடுகளில், குறிப்பாக பனிப்போர் முடிவடைந்த கடந்த முப்பது ஆண்டுகளாக, ஜனநாயக ரீதியில் அரசியல் தீர்வுகளை காண பொதுவாக்கெடுப்பு முறையே நடைமுறையில் உள்ளது. இந்த சர்வதேச நடைமுறையையே தமிழர்களாகிய நாமும் தொடர்ந்து கோரி வருகின்றோம்.

நன்றி.

கையொப்பம் இட்டவர்களும், ஒப்புதல் அளித்தவர்களும்,





தவத்திரு அகத்தியர் அடிகளார்
தென்கயிலை ஆதீனம், - திருகோணமலை




வண. பிதா. ஜோசப் மேரி (S J)
மட்டக்களப்பு





தவத்திரு வேலன் சுவாமிகள்
சிவகுரு ஆதீனம் – யாழ்ப்பாணம்
ஒருங்கிணைப்பாளர் - பொத்துவில் தொடக்கம்
பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சி இயக்கம்




வண. பிதா. ஜெயந்தன் பச்சாசெக் OMI
அமலமேரி தியாகிகள் சபை - யாழ்ப்பாணம்




வண. பிதா. கந்தையா ஜெகதாஸ் - மட்டக்களப்பு
ஒருங்கிணைப்பாளர் - பொத்துவில் தொடக்கம்
பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சி இயக்கம்.





திருமதி யோ. கனகரஞ்சினி
தலைவர் - வலிந்து காணாமல்
ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கம்
வடக்கு கிழக்கு மாகாணங்கள்





திரு.அ.விஜயகுமார்.
தலைவர் - யாழ்ப்பாணப் பல்கலைக்கழக
மாணவர் ஒன்றியம்



திரு. விக்னேஸ்வரன் கஜரூபன்
பிரதிநிதி - கிழக்கு பல்கலைக்கழக
மாணவர் ஒன்றியம் - கலை, கலாசார பீடம்



திரு. சி. தங்கராஜா
தலைவர்- பல்கலைக்கழக ஊழியர் சங்கம்
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்



தி. ருமதி. விமலேஸ்வரி ஸ்ரீகாந்தரூபன்
தலைவர் - பெண்கள் ஒருங்கிணைப்பு
கண்காணிப்பு சங்கம் -வடக்கு கிழக்கு
மாகாணங்கள்

திருமதி சரோஜா சிவச்சந்திரன்
தலைவர் - பெண்கள் அபிவிருத்தி நிலையம்.

திருமதி மிதுலைச்செல்வி ஸ்ரீபத்மநாதன்
தலைவர் - உழைக்கும் மகளீர் அமைப்பு